மட்/மம/மில்லத் மகளிர் மகாவித்தியாலயம், காத்தான்குடி

கொரோனா விடுமுறை கால செயலட்டை - 2020

தரம் - 10	தமிழ் இலக்கிய நயம்	நேரம்: 3 மணித்தியாலங்கள்
சுட்டெண்/பெயர் :		புள்ளி:

பகுதி - I

பகுதி I, பகுதி II ஆகியவற்றிலுள்ள 3 வினாக்களுக்கும் கட்டாயமாக விடையளிப்பதோடு பகுதி3 இலுள்ள 4 வினாக்களுக்குள் எவையேனும் 2 வினாக்களைத் தெரிந்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01. பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.

1. புத்தகசாலை எனும் கவிதையை எழுதிய பாரதிதாசனின் இயற்பெயர் என்ன?

2. புத்தக வாசிப்பில் மூழ்கிய போது கவிஞர் கண்டவைகள் எவை?

3. பத்தி எழுத்து என்றால் என்ன?

4. மனிதனுக்கும் மரத்திற்கும் உள்ள வேறுபாடுகள் பற்றி கவிக்கோ அப்துல் ரஹ்மான் ஒப்பிட்டுக் கூறுவதில் இரண்டினைக் கூறுக.

5. மனிதன் படைத்த மரங்கள் என பத்தியாளரால் குறிப்பிடப்படுபவை எவை?

6. "போர்க்களத்தில் பகை வரும் அஞ்சும் என் வலிமை இந்தப் பெண்ணின் வதன வனப்புக்குத் தோற்று அழிந்து விட்டதே" ஓ.....

அ. இக்காட்சி இடம்பெறும் இலக்கியம் எது?

ஆ. இது யாரால் எழுதப்பட்டது?

7. வாய்மொழிப் பாடல்களை வேறு எவ்விதம் அழைப்பார்கள்? வாய்மொழிப் பாடல்கள் யாரால் பாடப்பட்டவை?

8. "முளி தயிர் பிசைந்த காந்தள் மெல் வரல்"

அ. இப் பாடலைப் பாடிய புலவர் யார்?

ஆ. இப் பாடலடியில் இடம்பெற்றுள்ள அணி யாது? விளக்குக.

9. கடிநகர், செவிலித்தாய் என்பவற்றின் பொருளைத் தருக.

10. அமுதம் என்ற பாடலைப் பாடிய கவிஞர் யார்?

(4x5=20 புள்ளிகள்)

www.lkedu.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

தமிழ் இலக்கிய நயம்

(Tamil Lit)

ரி.காயத்திரி

1000/-

1000/-

தரம் 10

திங்கள் : 9 PM

வியாழன் : 7 PM

தரம் 11

புதன் : 8 PM

ஞாயிறு : 7 PM

COMMERCIAL BANK
Easy to Learn (Pvt) Ltd
Wellawatte
8008392295

BOC BANKERS TO THE NATION
S.Kishokumar
Nelliyaddy Branch
86479603

PEOPLE'S BANK
S.Kishokumar
Jaffna University
162-2-001-7-0028670

eZ Cash
0766674945

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

Tamil & English Medium

ONLINE EDUCATION

PRESCHOOL to A/LEVEL

facebook

for more inquries

076667 - 4945

02. கீழ்காணும் பாடற்பகுதியை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

தனித்தமைந்த வீட்டில் புத்தகமும் நானும்
சையோகம் புரிந்ததொரு வேளை தன்னில்
இனிந்தபுவி இயற்கையெழில் எல்லாம் கண்டேன்;
இசை கேட்டேன்! மணம் மோந்தேன்! சுவைகள் உண்டேன்!
மனிதரிலே மிக்குயர்ந்த கவிஞர் நெஞ்சின்
மகா சோதியிற் கலந்த தெனது நெஞ்சும்!
சனித்ததங்கே புத்துணர்வு! புத்தகங்கள்
தருமுதவி பெரிது! மகப் பெரிது கண்டீர்!

மனிதரெலாம் அன்புநெறி காண்பதற்கும்
மனோபாவம் வானைப்போல் விரிவடைந்து
தனிமனித தத்துவமாம் இருளைப் போக்கில்
சகமக்கள் ஒன்றென்ப துணர்வதற்கும்
இனிதினிதாய் எழுந்த உயர் எண்ணமெல்லாம்
இலகுவது புலவர் தரு சுவடிச்சாலை
புனிதமுற்று மக்கள் புது வாழ்வு வேண்டில்
புத்தகசாலை வேண்டும் நாட்டில் யாண்டும்

அ. கவிஞரின் மனமொன்றிய புத்தக வாசிப்பை வெளிப்படுத்தி நிற்கும் தொடர் யாது?
ஆ. புத்தக வாசிப்பில் கவிஞர் பெற்ற அனுபவம் எவ்வாறு விவரிக்கப்படுகிறது?
இ. இங்கு கையாளப்பட்டுள்ள உவமை அணியை இனங்கண்டு விளக்குக.
ஈ. இருளாக உருவகிக்கப்பட்டிருப்பது யாது?
உ. "மகா சோதியில் கலந்தது எனது நெஞ்சம்" எனும் தொடரில் நீர் காணும் நயத்தை விவரிக்குக.

(5x5=25புள்ளிகள்)

பகுதி - II

பின்வரும் உரைப்பகுதியை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

"போர்க்களத்தில் பகை வரும் அஞ்சும் என் வலிமை இந்தப் பெண்ணின் வதன வனப்புக்குத் தோற்று அழிந்து விட்டதே" "ஓ" என அலரும் ஒரு போர்வீரனைக் காமத்துப் பாலில் காட்டுகிறார் வள்ளுவர்.

வன்மையின் வெற்றி புறவயமானது மென்னையின் வெற்றி அகவயமானது. ஆண் புறவயமாகவே பெண்ணை ஆள முடியும். பெண்ணோ ஆணை அகவயமாக ஆள்கிறாள்.

வன்மையால் மண்ணைத்தான் பிடிக்க முடியும். மனங்களைப் பிடிக்க மென்மைதான் உதவும். வன்மையாளர்களுக்கு வரலாறு என்ற மயானத்தில் மட்டுமே இடம் கிடைக்கின்றது. மென்மையானவர்களுக்கோ அழியாத காவியங்களில் இடம் கிடைக்கிறது. வன்மையின் வெற்றிக்க அற்பாயுசு. மென்மையின் வெற்றிக்கோ தீர்க்காயுசு. உண்மையில் மென்மையே வன்மை.

அ. போர்வீரனின் வலிமை எதற்குத் தோற்றுப் போவதாக திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்?

ஆ. இவ்வுரைப்பகுதியில் புறவயமானது, அகவயமானது எனக் குறிப்பிடப்படுபவை யாவை?

இ. வன்மையானவர்கள், மென்மையானவர்களுக்கு எங்கு இடம் கிடைக்கும் எனக் கூறப்படுகிறது?

ஈ. அற்பாயுசு, தீர்க்காயுசு எவற்றிற்கு கிடைக்கிறது?

உ. இவ்வுரை நடைப்பகுதியில் ஆசிரியர் கூற விழைவது யாது?

www.lkedu.lk

பகுதி - III

04,05,06,07 ஆகிய வினாக்களுள் எவையேனும் இரண்டிற்கு மாத்திரம் விடை தருக.

04. தமிழர்க்குத் தமிழ்மொழியிற் சுவடிச்சாலை
சர்வகலாசாலையைப் போல் எங்கும் வேண்டும்
தமிழிலாப் பிறமொழி நூல் அனைத்தும் நல்ல
தமிழாக்கி வாசிக்கத் தருதல் வேண்டும்
அமுதம் போல் செந்தமிழிற் கவிதை நூற்கள்
அழகியவாம் உரைநடையில் அமைந்த நூற்கள்
சுமை சுமையாய்ச் சேகரித்துப் பல்கலை சேர்
துறை துறையாய் பிரித்தடுக்கி வைத்தல் வேண்டும்.

1. இப்பாடலில் கவிஞர் காண விழையும் நூலகம் எப்படிப்பட்டது?

2. சுவடிச்சாலை என்பதன் பொருள் யாது?

3. "அமுதம் போல் செந்தமிழிற் கவிதை நூற்கள்"..... என்ற பாடலடியினை விளக்குக.

4. பின்வரும் சொற்களின் பொருளை எழுதுக.

- சர்வகலாசாலை
- அமுதம்
- தொண்டு

5. நூலகத்திற்கு வருவோர்க்கு எத்தகைய தொண்டு செய்ய வேண்டுமென கவிஞர் குறிப்பிடுகிறார்?

05. பத்தி எழுத்தில் மரம் என்பது உயர்திணை என்பதற்கு பத்தியாளர் கூறும் காரணங்களை எழுதுக.

06. வாய்மொழிப் பாடல் என்ற பகுதியில் மருத்துவிச்சியின் வாழ்த்து என்ற பகுதி உறவுகளை மட்டுமன்றி சுற்றத்தையும் நோக்கி பரந்துபட்ட வாழ்த்தாகும் தெளிவுபடுத்துக.

07. 1. "இனிது என" என்ற பாடத்தை ஆதாரமாகக் கொண்டு செவிலித்தாய் தனது வளர்ப்பு மகனின் இல்லறப் பாங்கினை அவளைப் பெற்ற நற்றாய்க்கு எவ்விதம் எடுத்துக் காட்டுகிறார்?

2. இதில் பயன்படுத்தப்பட்டுள்ள அணிகளை விளக்குக.

www.lkedu.lk